யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

FWC

| தரம் :- 12 (2017) | வணிகக் கல்வி | நேரம் :- 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள்:-

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் :- ....................

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

01) பின்வரும் அட்டவணையில் X நிரலானது வணிக எண்ணக்கருக்களையும் Y நிரல் ஆனது அதனுடன் தொடர்புடைய பதங்களையும் காட்டுகின்றன.

| X நிரல் | Y நிரல் |
|---|---|
| A – வியாபாரம் | 1. முதன்னிலை, இரண்டாம்நிலை |
| B – வர்த்தகம் | 2. தேவைகளும் விருப்பங்களும் |
| C – கைத்தொழில் | 3. உரிமை மாற்றம் |
| D – வணிகம் | 4. கொள்வனவு, விற்பனை, துணைச்சேவை |

நிரல் X இற்கும், Y இற்கும் இடையிலான சரியான பிணைப்பாக இருக்கக்கூடிய தொகுதி எது?

1) A – 1, B – 2 C – 3 D – 4
2) A – 2, B – 3 C – 1 D – 4
3) A – 3, B – 4 C – 1 D – 2
4) A – 4, B – 3 C – 2 D – 1
5) A – 2, B – 1 C – 4 D – 3

(........)

02) பின்வரும் தொகுதிகளில் ஒன்று ஏனையவற்றிலிருந்து பொருத்தமற்று காணப்படுகின்றது. பொருத்தமற்ற அத்தொகுதியினைத் தெரிவு செய்க.

1) மூலதனம், உழைப்பு, நிலம், முயற்சி
2) பொருட்கள், சேவைகள், எண்ணங்கள், இடங்கள்
3) தனிநபர், அமைப்புக்கள், அனுபவங்கள், ஆதனங்கள்
4) உருவம், அருவம், நபர்கள், அனுபவங்கள்
5) தகவல், செயற்பாடுகள், எண்ணங்கள், அனுபவங்கள்

(........)



agaram.lk
Scanned with CamScanner

(03) வணிகச்சூழலுடன் தொடர்பான வகைகள் A, B, C, D, E எனவும் இதற்குப் பொருத்தமான விளக்கங்கள் 1, 2, 3, 4, 5 எனவும் தரப்பட்டுள்ளன.

A – வணிகச்சூழல்

B – அகச்சூழல் (உள்ளகச்சூழல்)

C – வெளியகச்சூழல்

D – அண்மிய (வேலை) சூழல்

E – பேரினச்சூழல்

1) வணிக அமைப்பில் தாக்கம் செலுத்துகின்ற சிறப்பு அமைப்புக்கள் அல்லது குழுக்கள்
2) வணிக நடவடிக்கைகளில் தாக்கங்களை உருவாக்குகின்ற காரணிகள் செயற்படும் சூழல்
3) அமைப்பினுள் காணப்படுகின்ற அதில் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற குழுக்களும் நிலைமைகளும்
4) அமைப்பொன்றின் முழுமையை நிர்ணயிக்கின்ற அதன் சுற்றுப்புறத்தின் கூடுதலான அம்சங்களில் தாக்கத்தினை ஏற்படுத்தும் காரணிகள்
5) நிறுவனத்தில் தாக்கம் செலுத்துகின்ற வணிகத்திற்கு வெளியே காணப்படுகின்ற நிலைமைகள் அனைத்தும்

சூழல் வகைகளுக்கு ஏற்ப விளக்கங்களைப் பொருத்தின் சரியானது

1) A – 3 , B – 1 , C – 4 , D – 2 , E – 5
2) A – 1 , B – 2 , C – 3 , D – 4 , E – 5
3) A – 4 , B – 5 , C – 1 , D – 2 , E – 3
4) A – 2 , B – 3 , C – 5 , D – 1 , E – 4
5) A – 5 , B – 4 , C – 2 , D – 3 , E – 1

(.......)

agaram.lk

(04) பின்வருவன இன்று பொருட்களில் காணப்படும் நியமக் குறியீடுகள் சிலவாகும்.




A B C D

நியமங்களின் பெயர்

1) சர்வதேச நியம புத்தக இலக்கம்
2) பதிப்புரிமை
3) துரித பிரதிபலிப்பு குறியீடு
4) பதிவு செய்யப்பட்டது

மேலே குறிப்பிட்ட குறியீடுகளுக்குரிய நியமங்களின் பெயர்களை முறையே பொருத்தும் பொழுது சரியான விடையாகக் கிடைப்பது

1) A – 3 , B – 1 , C – 4 , D – 2
2) A – 4 , B – 2 , C – 1 , D – 3
3) A – 2 , B – 1 , C – 4 , D – 3
4) A – 3 , B – 4 , C – 2 , D – 1
5) A – 1 , B – 2 , C – 4 , D – 3

(.......)

Scanned with CamScanner

(8) இலங்கையில் தொழிற்படுத்தப்படும் சர்வதேச தரக்குறியீடுகள் (ISO) X நிரலிலும், அதற்குப் பொருத்தமான விடயம் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X நிரல் | Y நிரல் |
|---|---|
| A – ISO – 22 000 | 1 – இடர்முகாமைத்துவ முறைமை |
| B – ISO – 26 000 | 2 – தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம் |
| C – ISO – 27 000 | 3 – உணவு பாதுகாப்பு முகாமைத்துவம் |
| D – ISO – 31 000 | 4 – வலுச்சக்தி முகாமைத்துவ முறை |
| E – ISO – 50001 | 5 – சமூகப்பொறுப்பு முகாமைத்துவமுறை |

X இற்கும், Y இற்கும் இடையிலான மிகச்சரியான இணைப்பு யாது?

1) A – 3, B – 1, C – 4, D – 2, E – 5
2) A – 2, B – 4, C – 1, D – 5, E – 3
3) A – 3, B – 5, C – 2, D – 1, E – 4
4) A – 4, B – 2, C – 3, D – 5, E – 1
5) A – 3, B – 5, C – 1, D – 4, E – 2

(.......)

(9) பின்வருவனவற்றிலிருந்து 1890 ஆம் ஆண்டின் பங்குடமைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் பங்குடமைக்குப் பொருத்தமான நிபந்தனையினைத் தெரிவு செய்க.

1) பங்காளர்கள் வணிகத்துக்கு வழங்கிய சேவைக்காக சம்பளம் பெறுவதற்கு உரிமை உண்டு.
2) வணிகம் தொடர்பில் தனிப்பட்ட முறையில் பங்காளர்கள் செய்த செலவுகளை வணிகம் செலுத்த வேண்டியதில்லை.
3) பங்காளரிடையே இலாபநட்டங்களை ஈடுபடுத்தப்பட்ட மூலதன விகிதாசாரத்தில் பங்கிடுதல்.
4) பங்காளர் அனைவரினதும் அனுமதியுடன் புதிய பங்காளர் ஒருவரை இணைக்க முடிதல்.
5) பங்காளர் மூலதனத்திற்கு வட்டியினைப் பெறமுடியும்.

(........)

(10) ஒற்றைப் பங்குதாரர் கம்பனியின் தோற்றத்திற்கான நோக்கமாகக் கொள்ளக்கூடியது
1) தனிவியாபாரத்தின் எண்ணிக்கையினைக் கட்டுப்படுத்த.
2) இலங்கையின் மூலதனச்சந்தையினை விரிவுபடுத்தல்.
3) தனியுடைமையாளர்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதும் சிறுவணிகங்களும் கம்பனிகளைத் தாபிக்க ஊக்குவித்தலும்.
4) அரசதுறையில் கம்பனிகளின் உடைமையினை அதிகரித்தல்.
5) எதிர்காலத்தில் வணிக அமைப்புக்கள் யாவற்றினையும் கம்பனி என்ற வகுதிக்குள் மாத்திரம் தோற்றுவிக்க ஊக்குவித்தல்.

(........)

(11) பின்வருவனவற்றிலிருந்து அங்கீகார வணிகமொன்றில் அங்கீகாரம் பெறுபவருக்குள்ள பிரதிகூலமென கருதப்பட முடியாதது எது?
1) பூரண சுதந்திரம் இல்லாதிருத்தல்.
2) முதலீடு தொடர்பான நட்ட அச்சம் இருத்தல்.
3) இலாபம் தொடர்பில் நிச்சயமற்ற தன்மை.
4) அதிக செலவினை செய்ய நேரிடுதல்.
5) தனது முதலீடின்றி வணிகத்தை நடாத்துதல்.

(........)

(12) முயற்சியாண்மைக்கான அபிவிருத்தி தொடர்பில் உதவும் சூழல் காரணி எது?
1) கல்வி
2) அனுபவம்
3) தலைமைத்துவம்
4) அர்ப்பணிப்பு
5) முன்மாதிரிகள்

(........)



agaram.lk

Scanned with CamScanner

(20) (அ) பின்வருவன வணிகங்கள் சிலவற்றுக்கு உரித்தான பண்புகள் ஆகும்.

- குறைந்த மூலதனம்
- சந்தை சிறிதாக இருத்தல்
- குறைந்தளவு ஊழியர்
- துறையில் அதிகாரமற்றவை

மேற்குறிப்பிட்ட பண்புகளைக் கொண்ட வணிகமாக கருதக்கூடியது ................ ஆகும்.

(ஆ) மார்ச் 15ம் திகதி சர்வதேச நுகர்வோர் தினமாகும். இத்தினத்தினை பிரகடனப்படுத்திய அமைப்பு ........................ என்பதாகும்.

❖ 21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடைகளை தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.

(21) பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படும் வழிமுறைகள் நான்கு முறைகளைக் குறிப்பிடுக.

1. ........................
2. ........................
3. ........................
4. ........................

(22) பின்வரும் தரநியமங்கள் தொடர்பான சுருக்கக் குறியீடுகளின் முழுப் பெயரை எழுதுக.

1. SLS : ........................
2. ISO : ........................
3. GMP : ........................
4. HACCP : ........................

(23) வணிகங்களை பல்வேறு நியதிகளின் கீழ் வகைப்படுத்த முடியும். அத்தகைய நியதிகள் நான்கினைக் குறிப்பிடுக.

agaram.lk

1. ........................
2. ........................
3. ........................
4. ........................

(24) பங்குடமையின் பங்காளர்களது கடமைகள் நான்கினைக் குறிப்பிடுக.

1. ........................
2. ........................
3. ........................
4. ........................

(25) இலத்திரனியல் அட்டைகளின் மூலம் கொடுப்பனவுகளினை மேற்கொள்வதற்கான வசதிகள் நான்கினைக் குறிப்பிடுக.

1. ........................
2. ........................
3. ........................
4. ........................

(25 x 2 = 50 புள்ளிகள்)



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

## Term Examination, March - 2016

தரம் :- 12 (2017) **வணிகக் கல்வி**

### பகுதி - II

அறிவுறுத்தல்கள்

ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

### பகுதி – அ

(01) i) மனித தேவைகள் பொதுவானது, விருப்பங்கள் பல்வேறுபட்டனவாகும்.

அ) மனித தேவைகளையும், விருப்பங்களையும் தனித்தனியே வரைவிலக்கணப்படுத்துக.

ஆ) ஏன் மனித விருப்பங்கள் ஆளுக்காள் வேறுபட்டிருக்கின்றன என்பதற்கு காரணங்களைக் குறிப்பிடுக.

ii) நிகழ்கால சமுதாயத்தில் மனிதனின் நீடித்த வாழ்விற்கு மாத்திரமன்றி வளர்ச்சிக்கும் வணிகம் அவசியமானதாகும்.

அ) வணிகங்களின் எவையேனும் நான்கு நோக்கங்களினைக் குறிப்பிடுக.

ஆ) வணிகங்களினால் பூர்த்தி செய்யப்படுகின்ற பல்வேறுபட்ட தேவைகள் யாவை?

iii) வணிகச் செயன்முறையினை உள்ளீடு வெளியீட்டுச் செயன்முறையொன்றாக வரைபடம் மூலம் முன்வைக்குக.

iv) வணிக நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட நான்கு நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

v) உற்பத்தி தொடர்பான பல்வேறு துறைகளின் பட்டியல் கீழே தரப்படுகின்றது.

- வேளாண்மை
- மொத்த சில்லறை வர்த்தகம்
- மின்வலு, வாயு, நீர்
- கடற்தொழில்
- போக்குவரத்தும் தொடர்பாடலும்
- வங்கித் தொழில்
- தயாரிப்புத்தொழில்
- காப்புறுதி
- தெங்கு பதனிடல்
- கட்டிடவாக்கம்
- கால்நடை
- சுரங்கமறுத்தலும் அகழ்வும்

மேற்தரப்பட்ட உற்பத்தித்துறைகளினை முதனிலை, இரண்டாம்நிலை ஆகிய இரண்டு வகைகளின் கீழும் தனித்தனியே வகைப்படுத்திக்காட்டுக.

(உமது விடைக்கு பின்வரும் அட்டவணையினை பயன்படுத்துக)

| முதன்னிலை | இரண்டாம்நிலை |
|---|---|
| | |

(5 X 2 = 10 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

(02) i) "முன்னரைப் போலன்றி இன்று நிறுவனங்கள் மீதான அக்கறையுடையவர்களின் எண்ணிக்கை அதிகமானதாகும்" கீழே குறிப்பிடப்படும் ஒவ்வொரு தரப்பினரும் உமது பாடசாலை மீது அக்கறைப்படுபவர்கள் ஆவார்.

- பெற்றோர்
- பழைய மாணவர்
- அரசு
- சமூகமட்ட தொழில் நிறுவனங்கள்

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு தரப்பினரும் பாடசாலை மீது அக்கறைப்படுவதற்குரிய காரணங்களை தனித்தனியே குறிப்பிடுக.

ii) வணிகத்தின் அகச்சூழல் காரணிகளையும், வேலைச்சூழல் காரணிகளையும் தனித்தனியே பட்டியலிடுக.

iii) பின்வரும் பொருளாதார நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் தாக்கத்தினைச் செலுத்தும் எவையேனும் பேரினச்சூழல் காரணிகள் தலா இரண்டினை ஒவ்வொரு நடவடிக்கைக்கும் தனித்தனியே குறிப்பிடுக.

(அ) நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் கண்காணிப்பினால் நாட்டில் விலைமட்டங்கள் சீராக உள்ளன.

(ஆ) ஆவணி மாத நல்லூர் உற்சவத்தில் வேறுபாடின்றி மக்கள் யாவருமே பங்குபற்றுவர்.

(இ) அருகி வரும் இயற்கை வளங்களால், அவற்றின் விலை நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது.

(ஈ) தகவல் தொடர்பாடல் வசதிகள் காரணமாக நாடுகளுக்கிடையிலான தொடர்புகள் வலுவடைந்துள்ளன.

iv) அரசு 2016 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான இலவச சீருடை விநியோகத்தினை, தனியார்துறை நிறுவனங்களூடே பங்கீடு செய்யும் முறையினை அறிமுகப்படுத்தியுக்கின்றது. மேற்படி பங்கீட்டுப் பணியினால் அரசுக்கும், தனியார்துறை நிறுவனங்களுக்கும் கிடைத்துள்ள தலா இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

v) அரசானது வணிகங்களில் செல்வாக்குச் செலுத்தும் எவையேனும் நான்கு முறைகளினைக் குறிப்பிடுக.

(5 X 4 = 20 புள்ளிகள்)

(03) i) கடன்தொடர்பான அளவுசார் கட்டுப்பாடு என்பதனை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு பின்பற்றும் வேறுபட்ட முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

ii) அரச வருமானங்களில் முக்கிய இடம் வகிப்பது வரி வருமானம் என்பதாகும்.

(அ) வரி என்பதனால் கருதப்படுவது யாது?

(ஆ) வரியினை அரசு விதிப்பதன் மூலம் எதிர்பார்க்கும் பொருளாதார விளைவுகள் யாவை?

iii) நடைமுறைச் செலவு, மூலதனச்செலவு என்பவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

iv) சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஜோன் F. கென்னடி அவர்களின் நுகர்வோர் உரிமைகள் நான்கினைக் குறிப்பிடுக.

v) நுகர்வோர் உரிமைகளை மீறும் வகையில் செயற்படும் வணிகருக்கெதிராக மேற்கொள்ளக்கூடிய நான்கு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(5 X 4 = 20 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

## பகுதி – ஆ

(அ) i) முறைசார்ந்த வணிக நிறுவனமொன்றின் பொதுவான குணாம்சங்களைச் சுருக்கமாக குறிப்பிடுக.

ii) பங்குடமையினை கட்டுப்படுத்தும் எவையேனும் நான்கு சட்டங்களைக் குறிப்பிடுவதுடன் அவை எவ்வாறு பங்குடமை நடவடிக்கைகளில் கட்டுப்பாடுகளை விதிக்கின்றதென விளக்குக.

iii) "வரையறுத்த சொந்தக்கம்பனியுடன் ஒப்பிடுமிடத்து வரையறுத்த பொதுக்கம்பனிகள் பொருளாதார முக்கியத்துவமுடையனவாகும். மேற்படி கூற்றுக்கு சார்பான காரணங்கள் நான்கினை முன்வைக்குக.

iv) சிறுகுறிப்பு எழுதுக.

அ) இழிவுக் கட்டணம்

ஆ) ஆரம்பப் பங்குகள்

v) பின்வரும் நிறுவன அமைப்புக்கள் தொடர்பான பண்புகளை கூட்டுறவு அமைப்புடன் தொடர்புபடுத்தி விளக்குக.

அ) உருவாக்கலும் பதிவு செய்தலும்

ஆ) சட்ட ஆளுமை

இ) நட்டப்பொறுப்பு

ஈ) முகாமையும் நிர்வாகமும்

(5 X 4 = 20 புள்ளிகள்)

agaram.lk

(ஆ) i) தற்போது அங்கீகார வணிகமுறையில் ஓர் அதிகரித்தபோக்கினை இலங்கையில் காண முடிகின்றதாயினும், இவ் அங்கீகார வணிகத்தில் சில பிரதிகூலங்களையும் கண்டு கொள்ள முடிகின்றது. அத்தகைய நான்கு பிரதிகூலங்களைக் குறிப்பிடுக.

ii) உயர்கல்விவாய்ப்பினைத் தவறவிட்ட பலர், தம்மால் இயலுமான ஓர் தொழில் முயற்சி ஒன்றினை ஆரம்பித்து நடாத்தும் ஆற்றலை, முயற்சியாண்மை பெற்றுக்கொடுப்பதுண்டு இந்த வகையில் முயற்சியாண்மையினால் தனிநபருக்கு (முயற்சியாளருக்கு) கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

iii) வெற்றிகரமான முயற்சியாண்மையாளரிடம் காணப்படக்கூடிய திறன்கள் நான்கினைக் குறிப்பிடுக.

iv) சிறுவணிகங்களை ஆரம்பிக்கும் போது கருத்தில்கொள்ள வேண்டிய காரணிகள் நான்கினை குறிப்பிடுக.

v) இலங்கையில் சிறிய வணிகர்களை ஊக்குவிப்பதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்கள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிட்டு அந்நிறுவனங்களினால் வழங்கப்படும் உதவிகள் ஒவ்வொன்று வீதம் குறிப்பிடுக.

(5 X 4 = 20 புள்ளிகள்)



Scanned with CamScanner

(06) i) "பணமெல்லாம் சிறந்த பணமல்ல" சிறந்த பணமாகக் கருதப்படுவதற்கு பணம் கொண்டிருக்க வேண்டிய பண்புகளினைக் குறிப்பிடுக.

ii) சிறுகுறிப்பு எழுதுக.

(அ) கடன் பணம்

(ஆ) இலத்திரனியல் பணம்

iii) இலங்கையில் தொழிற்படும் பல்வேறு நிதி நிறுவன வகைகளினைக் குறிப்பிடுக.

iv) உரிமம் பெற்ற வணிக வங்கிக்கும், உரிமம் பெற்ற விசேஷட வங்கிக்கும் இடையிலான இரண்டு வேறுபாடுகளினை குறிப்பிடுக.

v) அ) தமது வாடிக்கையாளர்களின் பெறுமதிமிக்க பொருட்களையும் முக்கிய ஆவணங்களையும் பாதுகாப்பதற்காக வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்படும் சேவை எப் பெயர் கொண்டு அழைக்கப்படும்?

ஆ) மேற்குறித்த சேவையினை வழங்குவதனால் வங்கிக்கு கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் எதுவெனக் கருதுகின்றீர்?

(5 X 4 = 20 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

| வணிகக்கல்வி | புள்ளித்திட்டம் | தரம் :- 12 (2017) |
|---|---|---|

## வணிகக்கல்வி - I

01) 3
02) 1
03) 4
04) 3
05) 2
06) 4
07) 2
08) 3
09) 4
10) 3
11) 5
12) 5
13) 3
14) 2
15) 1

(15 x 2 = 30 புள்ளி)

16) அ) நேர் உற்பத்தி (1 புள்ளி)
ஆ) நேர் உற்பத்தி (1 புள்ளி)

17) அ) நாணயக்கொள்கை (1 புள்ளி)
ஆ) இறைக்கொள்கை (1 புள்ளி)

18) ▲ பொறுப்பு (1 புள்ளி)
▲ மூலதன அமைப்பு (1 புள்ளி)

19) அ) கூட்டுறவு (1 புள்ளி)
ஆ) முயற்சியாளர் (1 புள்ளி)

20) அ) சிறுவணிகம் (1 புள்ளி)
ஆ) சர்வதேச நுகர்வோர் (1 புள்ளி)

21) 1. வட்டிவீதம் 2. காசுஒதுக்கு வீதம் 3. திறந்த சந்தை நடவடிக்கை 4. கழிவு வீதம்
5. கடன் அளவை வரையறுத்தல் 6. தார்மீக வேண்டுகோள் $(4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

22) 1. இலங்கைத்தரம் (SRILANKA STANDARD)
2. சர்வதேச தர நிறுவனம் (INTERNATIONAL STADARD ORGANIZATION)
3. சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GOOD MANUFACTURING PRACTICES)
4. அவதி / ஆபத்துக்கட்டுப்பாட்டுப் புள்ளி ஆய்வு
(HAZARD ANALYSIS AND CRITICAL CONTROL POINT) $(4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

23) 1) உற்பத்தித்தன்மை
2) உற்பத்தித்துறை
3) உரிமை
4) நோக்கம்
5) அளவு

$(4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

24) ★ வணிகக் கருமங்களில் ஈடுபாட்டுடன் கலந்துகொள்ளல்
★ தனிப்பட்ட இலாபம் பெறாதிருத்தல்
★ நட்டத்தில் பங்குபெறல்
★ போட்டி வணிகங்களில் ஈடுபடாதிருத்தல் $(4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

agaram.lk



Scanned with CamScanner

25) ★ தன்னியக்க டெலர் இயந்திரம் (ATM)
★ இலத்திரனியல் நிதிமாற்று விற்பனை நிலையம் (EFTPOS)
★ தொலைபேசி வங்கி வசதி (Tele Banking)
★ இணைய வங்கிக் கருமங்கள் (On line Banking)

(4 × ½ = 2 பு

## பகுதி - அ

01) i) அ) மனித தேவைகள் :
மனிதன் உயிர்வாழ்வதற்கு தேவைப்படும் உடல், உள ரீதியான தேவைப்பாடுகள் தேவையாகும்.

உதாரணம் :- உணவு, உடை, உறையுள்

(½ புள்

மனித விருப்பம் :- தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்படும் பல்வேறு வழிமுறைகள் விருப்பம் ஆகும்.

உதாரணம் : புரியாணி, T.சேட், மாடிவீடு

(½ புள்

ஆ) வயதுமட்டம்
பால் வேறுபாடு
பொருளாதாரமட்டம்
தொழில்
நடை, உடை, பாவனை
நம்பிக்கை
காலநிலை
கல்விமட்டம்

(4 விடயங்களுக்கு 1 புள்ளி

ii) அ) சந்தையில் நிலைத்திருத்தல்
இலாபத்தினை உச்சப்படுத்தல்
விற்பனையினை உச்சப்படுத்துதல்
சந்தைப்பங்கினை அதிகரித்துக்கொள்ளல்

(4 விடயங்களுக்கு 1 புள்ளி

ஆ) உணவு
உடை
உறையுள்
சுகாதாரம்
கல்வி
பொழுதுபோக்கு
தொடர்பாடல்
போக்குவரத்து
பாதுகாப்பு

(4 விடயங்களுக்கு 1 புள்ளி)

iii)

| உள்ளீடு | | வணிகச் செயற்பாடுகள் (செயன்முறை) | | வெளியீடு (½ புள்ளி) |
|---|---|---|---|---|
| நிலம்<br>உழைப்பு<br>மூலதனம்<br>முயற்சி<br>அறிவு<br>தகவல்<br>காலம் | → | நிர்வாகம்<br>உற்பத்தி<br>சந்தைப்படுத்தல்<br>நிதி<br>மனிதவளம்<br>ஆய்வும்<br>அபிவிருத்தியும் | → | பொருட்கள்<br>சேவைகள் |
| (½ புள்ளி) | | (½ புள்ளி) | | (½ புள்ளி) |

agaram.lk



Scanned with CamScanner

iv) உற்பத்தி - உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்துவதன் மூலம் பொருட்களையும், சேவைகளையும் உற்பத்தி செய்தல்

நிதி - மூலதனத்தினைப் பெறல், பயன்படுத்துதல் கணக்கீட்டுச் செயற்பாடுகள்

சந்தைப்படுத்தல் - கொள்வனவு, விற்பனை, மேம்படுத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள்

மனிதவளம் - விண்ணப்பங்களைக் கோரல், ஆட்சேர்ப்பு, தெரிவு செய்தல் போன்ற நடவடிக்கைகள்

நிர்வாகம் - அலுவலக, மற்றும் தகவல் முகாமைத்துவ நடவடிக்கைகள்

ஆராய்ச்சி அபிவிருத்தி - புதிய உற்பத்திமுறை, சந்தையாராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகள்

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

v)

| முதன்னிலை | இரண்டாம்நிலை |
|---|---|
| ★ வேளாண்மை | ★ மின்வலு, வாயு, நீர் |
| ★ கடற்தொழில் | ★ தயாரிப்புத்தொழில் |
| ★ கால்நடை | ★ தெங்குபதனிடல் |
| ★ சுரங்கமறுத்தலும் அகழ்வும் | ★ கட்டிடவாக்கம் |
| 4 விடயங்கள் 1 புள்ளி | 4 விடயங்கள் 1 புள்ளி |

02) i) பெற்றோர் - தமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுக்கும் சிறந்த கற்றல், கற்பித்தல் இடம்பெறுவதற்கும்

பழைய மாணவர் - தமது பாடசாலையின் தரவிருத்திக்கும் சமுதாய தேவைகளை பாடசாலை மூலம் பூரத்தி செய்வதற்கும்

அரசு - தனது நிதிப் பயன்பாட்டின் வினைதிறனுக்கும் சிறந்த சமுதாய உருவாக்கத்திற்கும்

சமுகமட்டதொழில் நிறுவனங்கள் - பொருத்தமான மனித வளங்களைப் பெறுவதற்கும் இணைபாடவிதானங்களுக்கு உதவுவதன் மூலம் செயற்திறன் விருத்திக்கும்

(வேறு பொருத்தமான விடைகளை கருத்தில் கொள்க) ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

ii) அகச்சூழல் காரணிகள்

- உரிமையாளர்
- முகாமையாளர்
- ஊழியர்கள்
- அமைப்புக் கலாச்சாரம்
- அமைப்புமுறை
- அமைப்பு வளங்கள்

(4 விடயங்கள் 1 புள்ளி)

வேலைச்சூழல் காரணிகள்

- வாடிக்கையாளர்
- வழங்குனர்
- போட்டியாளர்
- பதிலீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்வோர்
- சந்தைக்குள் பிரவேசிப்பதற்கு எதிர்பார்க்கும் புதிய வணிகர்

(4 விடயம் 1 புள்ளி)



agaram.lk
Scanned with CamScanner

iii) அ) நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை – அரசியல் சட்டசூழல்
விலைகள் - பொருளியல் சூழல்

(இரண்டும் சரியாயின் ½ புள்ளி)

ஆ) உற்சவம் - சமூககலாச்சாரசூழல்
மக்கள் - மக்கட்சூழல்

(இரண்டும் சரியாயின் ½ புள்ளி)

இ) இயற்கைவளம் - இயற்கைச்சூழல்
விலை – பொருளியல் சூழல்

(இரண்டும் சரியாயின் ½ புள்ளி)

ஈ) தகவல்தொடர்பாடல் - தொழில்நுட்பச்சூழல்
தொடர்புகள் - பூகோளச்சூழல்

(இரண்டும் சரியாயின் ½ புள்ளி)

iv) அரசு :-
- ★ வேலைப்பளு குறைவடைந்திருத்தல்
- ★ பங்கீட்டுப்பணி மிக சுமூகமாக நடைபெறுதல் ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

தனியார்துறை நிறுவனங்கள் :-
- ★ நிறுவன செயற்பாட்டு வினைதிறனை அதிகரித்தல்
- ★ விற்பனை, இலாப உழைப்பு உயர்வுக்கு பங்களித்தல்

(வேறு பொருத்தமான விடைகளை கருத்தில் கொள்க.) ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளி)

v) உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்
போட்டியாளரொருவராதல்
கொள்கைகளை உருவாக்குதல்
சட்டதிட்டங்களை விதித்தல்
ஊக்குவிப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல்
வரி அறவீட்டாளரொருவராதல் ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

3) i)
- ★ வணிக வங்கிகளால் வழங்கப்படும் கடன்களுக்கு உச்ச முதிர்வுக்காலத்தை நிர்ணயித்தல்
- ★ புதிதாக வழங்கப்படுகின்ற கடன்களுக்கு உச்ச வரையறைகளை நிர்ணயித்தலும் கடன்வழங்கலை நிறுத்தலும்
- ★ வணிக வங்கிகளின் மூலதனத்திற்கும், சொத்துக்களுக்குமிடையில் ஆகக்குறைந்த விகிதத்தினை நிர்ணயித்தல்
- ★ நாணயக் கடிதங்களை வழங்கும் போது வைப்புச் செய்ய வேண்டிய ஆகக்குறைந்த விகிதத்தினை நிர்ணயித்தல் ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

ii) அ) தனிநபர் ஒருவரினால் அல்லது நிறுவனமொன்றினால் கட்டாயமாகச் செலுத்த வேண்டுமென அரச அதிகாரம் கொண்ட நிறுவனமொன்றினால் விதிக்கப்படுகின்ற கொடுப்பனவு வரி ஆகும். (1 புள்ளி)

ஆ)
- ★ அரசு தனது செலவுகளை ஈடுசெய்ய
- ★ வணிகநிறுவன செயற்பாடுகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்க
- ★ தேசிய வருமானப் பங்கீட்டின் சமமின்மைகளை சீர் செய்ய
- ★ பொதுநல சேவைகளை மேம்படுத்த
- ★ சிகரெட், மதுபானம் என்பவற்றை ஊக்கமிழக்கச் செய்ய
- ★ சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைத் தீர்க்க.
- ★ நாட்டின் உற்பத்தி மட்டம், நுகர்வுமட்டங்களை ஒழுங்குபடுத்த

(4 விடயங்களுக்கு 1 புள்ளி)



agaram.lk
Scanned with CamScanner

iii) நடைமுறைச் செலவு :-
அரச சேவையினைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக ஏற்படும் செலவுகள் மீண்டெழும் செலவுகள் அல்லது நடைமுறைச் செலவுகள் என்பதாகும்.
உதாரணம் சம்பளம் / கூலியும்
வட்டிச் செலுத்துகை
மூலதனச் செலவு :-
நீண்டகால முதலீட்டாக அரசினால் மேற்கொள்ளப்படும் செலவுகள் மூலதனச் செலவுகள் என்பதாகும். (1 புள்ளி)
உதாரணம் பாரிய வீதிகளை அமைத்தல்
பாலங்களைக் கட்டுதல்

(1 புள்ளி)

iv)
- ★ பாதுகாப்பு பெறும் உரிமை
- ★ தகவல்களைத் தெரிந்துகொள்ளும் உரிமை
- ★ தெரிவு செய்வதற்கான உரிமை
- ★ கவனத்தை ஈர்ப்பதற்கான உரிமை

(4 × $\frac{1}{2}$ = 2 புள்ளி)

v) I.
- ★ நுகர்வோருக்கு அறிவூட்டும் விழிப்புணர்ச்சித் திட்டங்களை நடாத்துதல்
- ★ சட்டதிட்டங்களை உருவாக்குதல்
- ★ அடிக்கடி திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ளல்
- ★ முறையற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் வணிகங்களுக்கு தண்டனை வழங்குதல்
- ★ முறையற்ற வணிகர்களது செயற்பாட்டினை பிரச்சாரம் செய்தல்
- ★ தொடர்ச்சியாக தரப்பரிசோதனைகளை செய்தல்

(4 × $\frac{1}{2}$ = 2 புள்ளி)

## பகுதி - ஆ

4) i)
பொதுவான நோக்கம் ஒன்று காணப்படல்
அமைப்பு முறையொன்று காணப்படல்
தனிநபர்கள் இருத்தல்
வளங்கள் காணப்படல்
பல்வேறு செயற்பாடுகள் காணப்படல்
வியாபார பெயர் ஒன்று காணப்படல்
சட்டரீதியான தன்மை

(4 × $\frac{1}{2}$ = 2 புள்ளி)

ii)
- ★ 1890 ஆம் ஆண்டின் பங்குடமைகள் கட்டளைச் சட்டம் :-
  பங்காளரது இழிவு எண்ணிக்கை அவர்களது உரிமைகள், கடமைகள், பிணக்குகளை தீர்த்தல் என்பவற்றை எடுத்துக் கூறுகின்றது.
- ★ 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் :-
  இது பங்குடமையின் பங்காளர்களினது உச்ச எண்ணிக்கையினை 20 என மட்டுப்படுத்துகின்றது.
- ★ 1918 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வியாபாரப் பெயர் பதிவுச்சட்டம் :- இது பங்குடமையினை பதிவு செய்தல் தொடர்பில் எடுத்துக் கூறுகின்றது.
- ★ 1840 ஆம் ஆண்டின் மோசடி தவிர்ப்புக் கட்டளைச்சட்டம் :-
  இது பங்குடமையின் எழுத்து மூல ஒப்பந்தத்தினை வலியுறுத்துகின்றது.

(4 × $\frac{1}{2}$ = 2 புள்ளி)

iii)
- ★ பெருமளவானோருக்கு வேலைவாய்ப்பினை வழங்குதல்
- ★ நாட்டின் மொத்தத்தேசிய உற்பத்திக்கு பங்களிப்புச் செய்தல்
- ★ போட்டிகளை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல்
- ★ அந்நிய செலாவணிகளை சம்பாதிக்கும் ஆற்றல்
- ★ நவீனநுட்பமுறைகளினால் பேரளவு உற்பத்திகளை ஆற்றமுடிதல்

(4 × $\frac{1}{2}$ = 2 புள்ளி)

agaram.lk



Scanned with CamScanner

iv) அ) வரையறுத்த பொதுக்கம்பனிகள் ஆரம்பப் பங்கு வழங்கலின்போது திரட்டிக்கொள்ள வேண்டிய ஆகக்குறைந்த மூலதன அளவு இதுவாகும். (1 புள்ளி)

ஆ) கம்பனியை தோற்றுவிப்பதற்குப் பங்களிப்புச் செய்த தோற்றுவிப்பாளர்களின் விண்ணப்பங்களுக்கு வழங்கப்படும் பங்குகள் இவையாகும். (1 புள்ளி)

v) அ) 1972 ஆம் ஆண்டின் கூட்டுறவுச்சங்க சட்டத்தின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவு செய்வதன் மூலம் உருவாக்கப்படும்.

ஆ) சட்டத்தின் முன்னே தனிமனித அந்தஸ்து கொண்ட சட்டஆளுமை என்ற பண்பு இதற்கு வழங்கப்பட்டுள்ளது.

இ) அங்கத்தவர்கள் கொள்வனவு செய்த பங்கு பெறுமதிக்கு நட்டப் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

ஈ) அங்கத்தவர்களால் பொதுச்சபைக்கூட்டத்தில் நியமிக்கப்படும் பணிப்பாளர் சபையினால் கூட்டுறவு நிர்வாகம் செய்யப்படும்

$(4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

5) i)
- ★ அங்கீகாரம் பெறுபவருக்கு பூரண சுதந்திரம் இன்மை
- ★ முதலீடு தொடர்பான நட்ட அச்சம் இருத்தல்
- ★ இலாபம் தொடர்பில் நிச்சயமற்ற தன்மை
- ★ இவ் வணிக முறையில் நுழைய அதிக செலவுகள் ஏற்படல் $(4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

ii)
- ★ தனியார் திறனை வெளிப்படுத்த முடிதல்
- ★ கூடிய அர்ப்பணிப்புக்கேற்ப அதிக நன்மைகளைப் பெறமுடிதல்
- ★ சமூக அந்தஸ்து ஏற்புடைமை உருவாகுதல்
- ★ தனிப்பட்ட திருப்தி, இலாபம் கிடைத்தல்
- ★ வளர்ச்சியடையுமிடத்து ஏனையவர்களுக்கு தொழில் வழங்கும் திருப்தி $(4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

iii)
- ★ ஆரம்பிக்கும்திறன், சந்தர்ப்பங்களை இனம்காணல், தொடர்ந்து நடாத்தும் ஆற்றல் அர்ப்பணிப்பு, வினைதிறன், முறையான திட்டமிடல், தன்னம்பிக்கை விடாமுயற்சி (வேறு பொருத்தமான விடைகளை கருத்தில் கொள்க)

$(4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

iv)
- ★ வணிகத்தின் தன்மை
- ★ உற்பத்தியின் தன்மை
- ★ தேவைப்படும் மூலதனமும் பெறும் முறைகளும்
- ★ போட்டியின் தன்மை
- ★ அமைப்பின் தோற்றம்
- ★ சந்தை
- ★ சட்டதிட்டங்கள்

$(4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

v) கைத்தொழில் அபிவிருத்திச்சபை
- ★ உட்கட்டமைப்பு வசதிகள்
- ★ தொழில்நுட்ப சேவைகள்
- ★ ஆலோசனைச் சேவைகள்

தொழில்நுட்ப நிறுவனங்கள்
- ★ தொழில்நுட்ப சேவை
- ★ ஆலோசனைச் சேவை
- ★ ஏற்றுமதி அபிவிருத்திச்சபை

ஏற்றுமதி அபிவிருத்திச்சபை
- ★ சந்தைப்படுத்தல் வசதி
- ★ ஆலோசனைச் சேவை

தரநியம நிறுவனம்
- ★ தர ஆலோசனைகள்

$(4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

agaram.lk



Scanned with CamScanner

★ பொதுவாக ஏற்றுக்கொள்ளும் தன்மை
i) ★ நீண்டகாலப் பாவனை
★ அருமைத்தன்மை
★ இலகுவாக கொண்டு செல்லக்கூடிய தன்மை
★ சிறு அலகுகளாக பிரிபடக்கூடியதாக இருத்தல்

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

ii) அ) கடன்பணம் :- பொருட்கள், சேவைகளைக் கொள்வனவு செய்யப்பயன்படுத்தக்கூடிய, தனிப்பட்டவரிடமிருந்து அல்லது வணிக நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய எதுவும் கடன்பணம் ஆகும்.

(1 புள்ளி)

ஆ) இலத்திரனியல் பணம்
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் ஊடாக உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் கொடுக்கல் வாங்கல்களினை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப் படும் பணம் இதுவாகும்.

(1 புள்ளி)

iii) இலங்கை மத்தியவங்கி
வங்கிகள்
வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதிநிறுவனங்கள்
ஏனைய விசேட நிதிநிறுவனங்கள்
ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள்

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளி)

iv)

| உரிமம்பெற்ற வணிக வங்கி | உரிமம் பெற்ற விசேட வங்கி |
|---|---|
| மத்திய வங்கியிடமிருந்து சாதாரண அனுமதி நடைமுறைக் கணக்கினைப் பேண முடியும் | மத்திய வங்கியிடமிருந்து விசேட அனுமதி நடைமுறைக் கணக்கினைப் பேண முடியாது |

($2 \times 1 = 2$ புள்ளி)

v) பாதுகாப்பு பெட்டகம் ($\frac{1}{2}$ புள்ளி)

ஆ) ★ வருடாந்தம் சிற்றலுமாரிக்கான வாடகை வருமானம் கிடைத்தல்
★ வாடிக்கையாளருக்கு பாதுகாப்பு வசதியினை செய்து கொடுப்பதன் மூலம் வங்கி நன்மதிப்பு அதிகரித்தல்
★ இத்தகைய வாடிக்கையாளருக்கு தனது புதிய வங்கிச் சேவைகளையும், கணக்குகளினையும் அறிமுகப்படுத்த முடிதல்
★ சிற்றலுமாரிக்காக குறிப்பிட்ட தொகை ஒன்றினை சேமிப்பு வைப்பில் பிடித்து வைத்திருப்பதனால் வங்கியின் திரவத்தன்மை அதிகரித்தல்

($3 \times \frac{1}{2} = 1\frac{1}{2}$ புள்ளி)

agaram.lk



Scanned with CamScanner